செ.கு. எண் : 291

நாள் : 17-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

# அறிக்கை – 17.8.2012

விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு மின்சார வாரியப் பிரிவில் தினக்கூலி பணியாளராகப் பணியாற்றி வந்த செஞ்சி வட்டம், மழவந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகன் திரு. S,சரவணன் அவர்கள் 14.8.2012 அன்று தெரு விளக்கு பழுதுப் பார்க்கும் பணியினை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டம், ஆலப்பாக்கம் தமிழ்நாடு மின்சார வாரியப் பிரிவில் லைன் மேனாக பணி புரிந்து வந்த, திருவள்ளூர் வட்டம், ஒதிக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. B.மகேந்திரன் 15.8.2012 அன்று மின்விநியோக மின்னழுத்த மாற்றியில் ஏறி மின் தடை நீக்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின்சார வாரிய தினக்கூலி பணியாளர் திரு. சரவணன் மற்றும் லைன் மேன் திரு. மகேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது காலமான மின்வாரிய தினக் கூலி பணியாளர் திரு. S.சரவணன் மற்றும் லைன் மேன் திரு. B.மகேந்திரன் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9